இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை -2017/2018
**LWU 2312/LLU4806** – குற்றவியல் சட்டம்
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 26-02-2020 நேரம் : மு.ப 09.30 - பி.ப 12.30

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.
ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. (அ) " ஒரு நிகழ்வு பிழை பிழை ஆனது , ஒரு நபர் தான் ஏற்படுத்தம் பிரதிபலன் குற்றம் என்ற அறிவு இன்றி ஆயின் , தனது தன்னிச்சையான நடத்தையின் பிரதிபலனாக குற்றவியல் விளைவு ஒன்றை ஏற்படுத்த வழிவகுக்கிறது..."

(Peiris G.L, General Principles of Criminal Liability in Ceylon, Page 48.)

மேலுள்ள கூற்று இலங்கையின் குற்றவியல் தண்டனைச் சட்ட கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்வுப் பிழை எனும் எதிர்காப்பின் உண்மை நிலையை பிரதிபலிக்கிறதா?

நியதிச் சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றை எடுத்துக் காட்டி மேலுள்ள கூற்றை நுணுக்கமாகக் கணிக்க

(12 புள்ளிகள்)

(ஆ) குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவர் மேற்குறிப்பிட்ட எதிர்காப்பை ஏதேனும் நியதிச் சட்ட குற்றத்திற்கு எதிராக கோர முடியுமா?

கடும் பொறுப்பு கோட்பாடு, இலங்கை மற்றும் இங்கிலாந்து குற்றவியல் சட்டத்தில் இக்கோட்பாட்டின் பிரயோகம் என்பனவற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

(08 புள்ளிகள்)

(12 + 8 = 20புள்ளிகள்)

02 சமன் என்பவன் தான் காதல் விவகாரம் ஒன்றைப் பேணிய பெண் ஒருவரை திருமணம் செய்யும் எண்ணமுடன், அவனது மனைவி தில்கி என்பவளை கொலை செய்ய திட்டமிட்டான். அவனது திட்டத்தை அவனுக்கு மிகவும் நெருங்கியவனான சமிந்த என்பவனுக்கு விளக்கியதுடன் அத்திட்டத்தை செயற்படுத்துவதில் அவனின் உதவியையும் வேண்டினான். இத்திட்டத்தின் நிறைவில் சமிந்தவிற்கு ரூபா 300,000/= செலுத்த சமன் உறுதி அளித்தான். சமிந்த, தில்கியை விஷம் அளித்து கொலை செய்யுமாறு எடுத்துரைத்ததுடன், ஒரு சிறிய விஷ போத்தலையும் கொடுத்தான். மறுநாள் சமன் இரு குவளை பழச்சாறு தயாரித்ததுடன் ஒரு குவளையில் விஷத்தைக் கலந்தான். தனது இரண்டு வயது நிரம்பிய மகள் அருகில் விளையாட, தொலைக்காட்சியைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த தில்கியிடம் விஷம் இடப்பட்ட பழச்சாறை கையளித்த சமன் அறையில் இருந்து நீங்கியதுடன், தோட்டத்தில் காத்திருந்தான். சில நிமிடங்களின் பின்னர் சமன் தில்கியின் உதவி கோரும் அலறலைக் கேட்டு அவள் இருந்த அறைக்கு விரைந்து சென்றான். அவர்களது மகள் சுய நினைவு அற்று நிலத்தில் வீழ்ந்து இருப்பதைக் கண்டு சமன் அதிர்ச்சி அடைந்தான். அப் பிள்ளை வைத்தியசாலைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்ட இடத்தில் வைத்தியசாலை அனுமதியின் போது இறந்தது.

பின்னர் சமனின் மகள் தில்கியிடம் இருந்த விஷம் இடப்பட்ட பழச்சாறு கொண்ட குவளையை எடுத்து பருகியிருந்தமை கண்டறியப்பட்டது.

சமன் மற்றும் சமிந்த ஆகியோர் கொலைக்காக குற்றம் சாட்டப்பட்டனர்.

இலங்கையின் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான நியதிச் சட்ட உறுப்புரைகளை எடுத்துக்காட்டி அவர்களது குற்றத் தன்மையை ஆராய்க.

(20 புள்ளிகள்)

03. கட்டுமாண கம்பனி ஒன்றின் பயிற்சி தள மேற்பார்வையாளரான பிரமோத் என்பவன், அதே கம்பனியில் வரவேற்பாளராக பணியாற்றும் மேனகா எனும் பெண்ணுடன் உறவு ஒன்றை ஆரம்பித்தான். ஒரு வெள்ளிக்கிழமை மாலை, பிரமோத் நகரில் உள்ள பிரபல்யமான உணவகம் ஒன்றில் இரவு உணவு அருந்துவதற்காக மேனகாவை அழைத்தான். உணவருந்தும் போது, பிரமோத் அவ் உணவகத்தின் பணியாளர் ஒருவரிடம் மிக நெருக்கமாக அமர்ந்திருந்த பிரமோத் மற்றும் மேனகாவை புகைப்படம் எடுக்குமாறு கேட்டான். அப்புகைப்படங்களை பிரமோத் அவனது கையடக்கத் தொலைபேசியில் சேமித்தான். சில நாட்களின் பின்னர் பிரமோத் கம்பனியை விட்டு நீங்கினான். ஒருநாள் பிரமோத் கையடக்கத் தொலைபேசியில் மேனகாவை அழைத்து, உடனடியாக ரூபா 500,000/= கோரியதுடன், மேனகா அவனது கோரிக்கைக்கு இணங்காத போது அவளுடன் திருமணம் புரிய நிச்சயிக்கப்பட்டுள்ள கெவின் என்பவனுக்கு அப்புகைப்படங்களை அனுப்புவதாக அச்சுறுத்தினான். மறுநாள் மேனகா தனக்கு ஏற்படக்கூடும் அவமதிப்பு மற்றும் தனது வருங்கால கணவரை இழக்கக் கூடும் ஆகிய பயத்தில், தனது தங்க நகையை அடகு வைத்து ரூபா 300,000/= இனை பிரமோத்திடம் கையளித்தாள்.

இலங்கையின் குற்றவியல் தண்டணைச் சட்டக் கோவையின் கீழ் பிரமோத் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட முடியுமா ஆராய்க?

(20 புள்ளிகள்)

04. சிசிர என்பவன் விமல் என்பவனை கடற்கரையில் இடம்பெற்ற ஒன்றுகூடல் விழா ஒன்றின் போதான கடும் வாக்குவாதத்தின் மீது வெற்று போத்தலால் தாக்கியதுடன், விமல் கடற்கரையில் சுய நினைவிழந்து வீழ்ந்தான். சிசிர அவ்விடத்தை விட்டு தான் விமலை அழிக்கப் போவதாக உறுதி செய்து நீங்கினான். அதிகளவான மதுபான உள்ளெடுப்பு காரணமாக மதுபோதைக்கு உள்ளாகியிருந்த, விமல் மற்றும் சிசிரவுடன் உடனிருந்த மற்ற இருவரும் விமலை கடலின் முனையில் இழுத்து வைத்துவிட்டு சென்றனர். பின்னிரவில் அலை வரவே விமல் மூழ்கினான். விமலின் உடல் மறுநாள் காலை கண்டறியப்பட்டது.

சிசிர மற்றும் அவனுடன் இருந்த மற்ற இருவரும் விமலை மூழ்கடித்து மரணமடையச் செய்ததற்காக குற்றம் சாட்டப்பட்டனர்.

சிசிர மற்றும் அவனுடன் இருந்த இருவரதும் குற்றவியல் பொறுப்புடைமையை செயற்கோவை விதியுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.உமது வாதங்களை வழக்குதாரணங்களினால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

05. ஹிருணி எனும் 14 வயது நிரம்பிய பெண் பிள்ளையை அவளது சட்டபூர்வமான கட்டுக்காவலில் இருந்து கடத்தியமைக்காக சுஜித் என்பவன் குற்றம் சுமத்தப்பட்டான். சுஜித்திற்கான எதிர்த்தரப்பு சட்டத்தரணியாக பின்வரும் எதிர்வாதங்களின் வலிதாந்தன்மையை பொருத்தமான நியதிச் சட்டப் பிரிவுகள் மற்றும் வழக்குகள் என்பவற்றின் அடிப்படையில் ஆராய்க.

I. ஹிருணி சுஜித்தை வீட்டை விட்டுச் செல்ல அழைத்ததுடன் மேலதிக வகுப்பிற்கு செல்வது போல பாவனைசெய்து அவள் வீட்டை விட்டு நீங்கி சுஜித்தை வகுப்பின் வாசலில் சந்தித்தாள்.

II. ஹிருணி, சுஜித்தை தான் 18 வயது நிரம்பியவள் என நம்பச் செய்திருந்தாள்.

III. சுஜித், ஹிருணியை சிட்டி சென்டர் சினிமாவில் திரைப்படம் ஒன்றை பார்வையிடுவதற்காக மட்டும், அவளை மாலை வீட்டிற்கு திருப்பி அனுப்பும் நோக்கில் அழைத்து இருந்தான்.

(20 புள்ளிகள்)

06. "சிட்டி ரெஸ்டோரண்ட்" இன் பணியாளரான சதுர என்பவன் வாடிக்கையாளர் ஒருவரால் மேசையில் விட்டுச் செல்லப்பட்டிருந்த டெப்லட் மடிக்கணனி (Tablet Computer) ஒன்றை கண்டான். அகப்படக்கூடும் என்ற பயத்தினால் அந்த டெப்லட் மடிக்கணனியை துணிவுடன் உடனடியாக எடுக்காது, சதுர அதன் செயற்பாட்டைத் துண்டித்து குப்பைதொட்டியின் பின்புறம் மறைத்தான். அது ஒரு போதும் உரிமையாளரால் கண்டறியப்பட மாட்டாது என்றும் பணியை நிறைவு செய்து மீள் திரும்பும் போது மறைத்து வைத்துள்ள இடத்தில் இருந்து அதனை எடுத்துச் செல்லவும் கருதினான்.

இலங்கையின் குற்றவியல் தண்டனைச்சட்ட கோவையின் கீழ் சதுர ஏதேனும் குற்றவியல் குற்றத்தை புரிந்துள்ளானா?

ஆராய்க.

உமது வாதங்களை பொருத்தமான நியதிச் சட்டம் மற்றும் வழக்குதாராணம் என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

07. விளக்குக.

(அ) குற்றத்தில் இருந்து விடுவிக்கும் வாதம் மற்றும் தண்டனை தணிப்பு வாதம் என்பவற்றின் தன்மை மற்றும் அவற்றிற்கிடையிலான வேறுபாடு மற்றும்

(ஆ) இலங்கையின் தண்டனைச் சட்ட கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொலைக் குற்றத்திற்கு கிடைக்கத்தகு தண்டனைக் தணிப்பு வாதத்தின் பிரயோகம்

(10x2 = 20 புள்ளிகள்)

8. புராதன உரோமச் சட்டத்தின் கீழ் குழந்தைப் பராயம் தொடர்பான எதிர்காப்பின் தோற்றுவாய் குறித்து ஆராய்க. அதன் பிரயோகத்தை இலங்கை மற்றும் இங்கிலாந்தின் குற்றவியல் சட்டங்களது நவீன பின்னனியின் மீது தொடர்புபடுத்தி ஒப்பிடுக

(20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது